**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

**S.நாகராஜன்** — **தலைவர்**
**K.சந்திரசேகரன்,B.A** — **பொதுச்செயலாளர்**
**B.தியாகராஜன், M.Com.,** — **நிதிச்செயலாளர்**

கடித எண்: 33/19
13-02-2019

பெறுநர்,
தலைமை பொறியாளர் /பணிஅமைப்பு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை – 2.

ஐயா,

பொருள் : நிர்வாகம் - நாமக்கல் மின்பகிர்மான வட்டம் - மின்பாதைகளின் ஆய்வாளர் - மாறுதல் உத்திரவுகள் சம்மந்தமாக.

பார்வை :
1. SE/NEDC Memo No:003240/166/ADM II /A1/FLI/2018-3 dated: 19-01-2018.
2. SE/NEDC Memo No:005353/282/ ADM II /A1/FLI/2018 dated: 14-05-2018.
3. (Per)CMD Tangedco Proceedings No:121 Adm.Branch dated: 26-12-2018.

*********

நாமக்கல் மின் பகிர்மான வட்டத்தில் மிகைநிலை மின்பாதைகளின் ஆய்வாளரிலிருந்து மின்பாதைகளின் ஆய்வாளர் பதவி உயர்வு வழங்கிட பார்வை 1ல் குறிப்பிட்டுள்ள குறிப்பாணை மூலம் 59 நபர்களுக்கு பதவி உயர்வு பட்டியல் தயாரிக்கப்பட்டு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டு, அப்பட்டியல் பூர்த்தி ஆகிவிட்டது. இளமின்பொறியார் IIம் நிலை, சிறப்புநிலை முகவர், முகவர் Iம் நிலை போன்ற பதவி உயர்வுகள் கூடுதலாக வழங்கப்பட்ட நேர்வுகள் காரணமாக பார்வை 2ல் குறிப்பிட்டுள்ள குறிப்பாணை மூலம் மீண்டும் 32 நபர்களுக்கு மின்பாதைகளின் ஆய்வாளர் பதவி உயர்வு பட்டியல் தயாரித்து பதவி உயர்வுகள் வழங்கப்பட்டு அதுவும் பூர்த்தி ஆகிவிட்டது.

பார்வை 1ல் குறிப்பிட்டுள்ள குறிப்பாணை மூலம் பதவி உயர்வு வழங்கப்பட்டபோது திருச்செங்கோடு, பரமத்தி வேலூர் ஆகிய கோட்டங்களில் போதிய பொறுப்புகள் காலி இல்லாத காரணத்தால் ஒரு சிலருக்கு இராசிபுரம் கோட்டத்திற்கும், நாமக்கல் கோட்டத்திற்கும் நியமனங்கள் வழங்கப்பட்டு அங்கு பணியேற்று, பணிபுரிந்து வருகின்றனர். இவர்களின் தாய் கோட்டங்களில் மின்பாதைகளின் ஆய்வாளர் பொறுப்பு பின்பு காலி ஏற்பட்டும் இவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்ட பதவி உயர்வு பட்டியல் (பேனல்) பூர்த்தி ஆகி மற்றொரு பதவி உயர்வு பட்டியல் தயாரிக்கப்பட்டு விட்டதால் வாரிய விதிமுறைகளின்படி இவர்களுக்கு Re-Back Policy ன் கீழ் மாறுதல் வழங்க இயலாமல் தாய் கோட்டங்களுக்கு வர இயலாமல் மாற்று கோட்டங்களிலேயே தங்கி விட்டனர். ஜனவரி – 2019 அரையாண்டு காலத்திலும் இவர்கள் மேற்கண்ட கோட்டங்களில் ஒரு ஆண்டு பணிக்காலத்தை பூர்த்தி செய்யாததால் விருப்ப மாறுதல் விண்ணப்பமும் வழங்கிட இயலவில்லை.

தற்போது பார்வை 3ல் குறிப்பிட்டுள்ள ஆணைப்படி வேலைப்பளு ஒப்பந்தப்படி நாமக்கல் வட்டத்திற்கு 4 கோட்டங்களுக்கும் கோட்டத்திற்கு 11 பொறுப்பு வீதம் 44மின்பாதை ஆய்வாளர் பொறுப்புகள் கூடுதலாக அனுமதிக்கப்பட்டுள்ளதால் திருச்செங்கோடு மற்றும் பரமத்தி வேலூர் கோட்டங்களில் கூடுதலாக பொறுப்புகள் உருவாகி உள்ளது. இதனை நிரப்பிட விருப்ப மாறுதல் கொள்கைகள் அடிப்படையிலான விண்ணப்பங்கள் எதுவும் நிலுவையில் இல்லை. புதிதாக பதவி உயர்வு பட்டியல் தயாரித்து தான் இந்த இடங்களுக்கு பணி ஆட்களை நியமித்திட வேண்டும்.

இந்நிலையில் ஏற்கனவே திருச்செங்கோடு மற்றும் பரமத்தி வேலூர் கோட்டங்களிலிருந்து இராசிபுரம் மற்றும் நாமக்கல் கோட்டத்திற்கு பணி நியமனம் செய்யப்பட்ட மின்பாதைகளின் ஆய்வாளர்கள் தங்களுடைய தாய் கோட்டங்களுக்கு மாறுதல் வழங்கிடகோரி மேற்பார்வை பொறியாளர் நாமக்கல் மின்பகிர்மான வட்டம் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் தற்போது தாங்கள் பணிபுரியும் பணியிடத்தில் ஓர் ஆண்டு பணிக்காலத்தை பூர்த்தி செய்துள்ளனர். இது குறித்து எங்களது சங்கத்தின் சார்பாகவும் மேற்பார்வை பொறியாளர் நாமக்கல் மற்றும் தலைமைப் பொறியாளர் பகிர்மானம்/ஈரோடு மண்டலம் ஆகியோரிடம் முறையீடு செய்து உள்ளோம். இப்பிரச்சினையில் உள்ள நியாயத்தின் காரணமாக இவர்களுக்கு இவர்கள் வேண்டியுள்ள தாய்கோட்டங்களுக்கு மாறுதல் வழங்கிட பரிந்துரை செய்து இதற்கான அனுமதியினை வழங்கிட கோரி மேற்பார்வை பொறியாளர் நாமக்கல் அவர்கள் முன்மொழிவு ஒன்றினை தலைமைப்பொறியாளர் பணிஅமைப்பு அவர்களுக்கு அனுப்பிவைத்துள்ளதாக அறிய வருகின்றோம்.

1. அனுமதிக்கப்பட்டுள்ள பொறுப்புகள் வேலைபளு ஒப்பந்தபடி அனுமதிக்கப்பட்டுள்ள புதிய பொறுப்புகள்
2. தாய் கோட்டங்களுக்கு மாறுதல் கோரும் நபர்கள் மின்பாதைகளின் ஆய்வாளர் பொறுப்பில் முதியவர்கள்
3. இவர்களில் பெரும்பாலானவர்கள் தற்போது ஓர் ஆண்டு பணிக்காலத்தை பூர்த்தி செய்துள்ளனர்.

தலைமைப்பொறியாளர்/பணிஅமைப்பு அவர்கள் மேற்கண்டவைகளை பரிசீலித்து மேற்கண்ட நபர்களுக்கு அவர்கள் கோரியுள்ளவாறு தாய்கோட்டங்களுக்கு ஒரு சிறப்பு நிகழ்வாக (Special Case) மாறுதல் வழங்கிட உரிய அனுமதியினை நாமக்கல் வட்ட நிர்வாகத்திற்கு வழங்கி உதவிடுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி

தங்கள் உண்மையுள்ள

(கே.சந்திரசேகரன்)
பொதுச்செயலாளர்

நகல் : 1. தலைமைப் பொறியாளர் பகிர்மானம்/ஈரோடு மண்டலம்.
2. மேற்பார்வை பொறியாளர்/நாமக்கல் மின் பகிர்மான வட்டம்.
3. அமைப்புச் செயலாளர் /மேட்டூர், 4. வட்டச் செயலாளர் /நாமக்கல்.